©
தமிழ்நாடு அரசு
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 1] சென்னை, புதன்கிழமை, ஜனவரி 7, 2015
மார்கழி 23, ஜய, திருவள்ளுவர் ஆண்டு – 2045

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 223, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M–2)த் துறை, 17 செப்டம்பர் 2013.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) பிரிவு 112 மற்றும் பிரிவு 118 மற்றும் பிரிவு 115–ன் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 21–03–2012 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் III பிரிவு 1(a) இல் 26 முதல் 44 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட எண் SRO A-11/2012 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாயப்புத் துறை அறிவிக்கையில் கீழ்க்காணும் திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன அறிவிக்கையின் வரைவு திருத்தங்களில்,–

(1) பகுதி II–ல் "விவர அட்டவணை 1" இன் கீழ் வரைவு திருத்தம் (4)–இல் நெடும்பத்தி (1)–இல் தொடர் எண் 631 க்கு நிகரான "Trans-1, 4–'டைகுளோரோ பியூட்டேன்" என்ற தொடருக்குப் பதிலாக நெடும்பத்தி (2) இல் "Trans-1, 4–'டைகுளோரோ பியூட்டென்" என்ற தொடரினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

(2) வரைவு திருத்தம் (6)–இல் பகுதி (a) இல் –துணை அளவீடு" என்ற தொடருக்குப ʹபதிலாக – "துணைத் தலைப்பு" என்ற பதிவினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 258, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H–1)த் துறை, 5 நவம்பர் 2013.]*

1961 ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் (மத்திய சட்டம் 27/61) 40 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் 40 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு வரைவு வெளியிடப்பட்ட 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனப் போக்குவரத்து தொழிலாளர் விதிகளில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 4 ஆம் விதியைச் சேர்ந்த (4) துணைவிதியின் அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணையினை அமைத்துக் கொள்ள வேண்டும், அதாவது:—

**அட்டவணை**

| *ஒரு ஆண்டின் எந்த நாளிலும் பணிக்கமர்த்தும் மோட்டார் வாகனப் போக்குவரத்து தொழிலாளர்களின் அதிகபட்ச எண்ணிக்கை* | *கட்டணம் ரூபாயில்* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 25க்கு அதிகப்படாமல் | 2,500 |
| 25க்கு அதிகமாக, ஆனால், 50க்கு அதிகப்படாமல் | 5,000 |
| 50க்கு அதிகமாக, ஆனால், 100க்கு அதிகப்படாமல் | 10,000 |
| 100க்கு அதிகமாக, ஆனால், 500க்கு அதிகப்படாமல் | 50,000 |
| 500க்கு அதிகம் | 1,00,000 |

(2) 6 ஆம் விதிக்குப் பதிலாக, பின்வரும் விதியினை அமைத்துக் கொள்ள வேண்டும், அதாவது :—

"6. பதிவுச்சான்றின் செல்திறன்:– 5ஆம் விதியின்கீழ் வழங்கப்பட்ட அல்லது 8ஆம் விதியின் கீழ் புதுப்பிக்கப்பட்ட ஒவ்வொரு பதிவுச் சான்றும், வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து தொடங்கி இரண்டு ஆங்கில ஆண்டு கால அளவிற்குச் செல்திறனுள்ளதாக இருக்கும்."

(3) 7ஆம் விதியைச் சேர்ந்த (3) ஆம் துணை விதியில் "*முப்பது ரூபாய்*" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "*நூறு ரூபாய்*" என்ற சொற்றொடரினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

(4) 9ஆம் விதியைச் சேர்ந்த (2) ஆம் துணை விதியில் "*முப்பது ரூபாய்*" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "*நூறு ரூபாய்*" என்ற சொற்றொடரினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

(5) 11ஆம் விதியைச் சேர்ந்த (1) ஆம் துணை விதியில் "*முப்பது ரூபாய்*" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "*நூறு ரூபாய்*" என்ற சொற்றொடரினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

(6) பிற்சேர்க்கையில்,–

(i) படிவம் எண் I–இல்,–

*(a)* தொடர் எண் 1–இல்– ஆங்கில ஆண்டு" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "இரண்டு ஆங்கில ஆண்டு கால அளவு" என்ற சொற்றொடரினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

*(b)* தொடர் எண் 1–இல்– ஆங்கில ஆண்டு" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "இரண்டு ஆங்கில ஆண்டு கால அளவு" என்ற சொற்றொடரினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

(ii) படிவம் எண் II–இல், "19, டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் செயலில்" என்ற பதிவுக்குப் பதிலாக "இரண்டு ஆங்கில ஆண்டுகள் கால அளவிற்குச் செயலில்" என்ற பதிவினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (G1)த் துறை, 1 ஜூலை 2014.]*

1946 ஆம் ஆண்டு தொழிலக வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டத்தின் (மத்திய சட்டம் 20/46) 15 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு, தொழிலக வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) விதிகளில் கீழ்க்காணும் திருத்தத்தினை இதனால் செய்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2) இதனால் செய்யப்படும் மேற்சொன்ன திருத்தம் இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில் 3ஆம் விதியில் (1)ஆம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் துணை விதியினை அமைத்துக் கொள்ள வேண்டும், அதாவது:—

(1) வேலையளிப்பவரால், அவரது தொழிலக நிறுவனத்தில் பின்பற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள வரைவு நிலை ஆணைகளின் ஐந்து நகல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக, அந்த நிறுவனத்தின் தொழிற்சங்கத்திற்குத் தேவைப்படும் உதிரி நகல்களோடு சான்றளிக்கும் அலுவலருக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (G1)த் துறை, 18 ஜூலை 2014.]*

1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/1946) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (2) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை வேலைவாய்யப்பு (நிலை ஆணைகள்) விதிகளில் திருத்தம் செய்து வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 15ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்தத் திருத்தம், இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

மேற்சொன்ன விதிகளில், முதலாம் அட்டவணையின் கீழ் வேலையாட்களுக்குப் பொருந்தத்தக்க, மாதிரி நிலை ஆணைகள்'' பதினேழாம் பத்தி, (4) வது பிரிவைச் சேர்ந்த (bb) உட்பிரிவுக்குப் பின்னால், பின்வரும் உட்பிரிவினைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது,—

''(bbb)-விசாரணையின் போது, வேலையாள் நேரில் ஆஜராகி அல்லது அவர் உறுபப்பினராயிருக்கிற தொழிற்சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பிலிருக்கும் ஒருவர் மூலமாக விளக்கம் அளிக்க உரிமை உண்டு''.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.